தரம் 11

பாடம் 01

# இறைவனே படைப்பிற்கெல்லாம் மூல காரணம்

## யூத சமூக நோக்கு

**தொடக்க நூல் 12:2-3 ஆபிரகாமின் அழைப்பு**

ஆரான் தேசத்தில் ஆபிரகாமையும் அவனது குடும்பத்தையும் ஆண்டவர் அழைத்தார். தன் தாய்நாடு, தந்தையின் வீடு, உறவினர், உடைமைகள் அனைத்தையும் விட்டு ஆபிரகாம் புறப்பட்டார். நாமும் இறைவனுக்கு பணிந்து செயற்படும் போது எமக்கானவற்றை தியாகம் செய்யவேண்டிய நிலை ஏற்படலாம்.

**ஆபிரகாமின் நம்பிக்கை**

இறைவனை மட்டும் வழிபட்டு வாழ வேண்டும். இதிலிருந்து வெளிபடும்இரு கருத்துக்கள்.

1. யூத சமூகமானது ஒரே கடவுள் கொள்கையில் கட்டியெழுப்பப்பட்ட சமூகம்.
2. அதேபோன்று அந்த சமூகத்தின் ஆரம்ப வரலாறு, ஆபிரகாமின் இறை அழைப்போடு தொடர்புப்பட்டு காணப்படுகின்றது.

**தொடக்க நூல் 12:2, 13:16, 15:5**

ஆபிரகாம் பெரிய இனத்தின் தந்தையாக நியமிக்கப்பட்டார். பூவுலகின் மண்ணைப் போலவும், விண்மீன்கள் போன்றும் எண்ணமுடியாத அளவு வழிமரபினரை வழங்க ஆண்டவர் வாக்கு கொடுத்தார். ஆபிரகாம் என்பதன் அர்த்தம் 'இனத்தின் தந்தை' ஆகும்.

**விடுதலைப் பயணம் 20:1-17**

பத்து கட்டளைகளில் ஒழுக்கமான சமூகம். முதல் நான்கு (2-11) மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவும், மனிதன் இறைவனுக்கு செய்யவேண்டிய கடமைகளாகும்.

மிகுதியாக உள்ள ஆறும் (12-17) மனித-மனித உறவின் பண்பகளும் மனித உறவும் சொல்லப்படுகின்றது.

**கற்ற பாடத்தின் சுருக்கம்**

1. யூத சமூக நோக்கின் உன்னதர் இறைவன்.
2. யூத சமூகத்திலும் நல்ல விழுமியங்கள் காணப்பட்டது.
   - குடும்பங்களுக்குள்ளேயே பிள்ளைகள் இயல்பாக கல்வி கற்றமை பாராட்டுக்குரியது.
   - யூத குடும்ப அமைப்புக்கூடாகப் பிள்ளைகளுக்கு விசேட இடம் இருந்தது.

3. ஆபிரகாமின் அழைப்போடு இஸ்ரயேல் மக்களின் வரலாறு ஆரம்பிக்கின்றது.
4. இறை உறவுடன் சமூக நோக்கு வளப்படுத்தப்பட்டது.
5. இஸ்ரயேலர் மற்றவர்களுக்கு ஆசியாக விளங்கியமை யூத சமூக நோக்கில் எடுத்துக் காட்டப்படுகின்றது. (எசாயா 19:2, 7:6-8)
6. கிறிஸ்தவ விழுமியங்கள் மூலம் சமூகம் வளப்படுத்தப்பட வேண்டும்.
7. இறை உறவை மையப்படுத்தி சமூக நோக்கை கட்டியெழுப்பப்பட்டது.

## யூத சமூகத்திலிருந்த தீமைகள்

1. பெண்களை மதியாமை
2. பிற இனத்தவர் பற்றி நல்ல எண்ணம் இல்லாமை.
   உதாரணம் :- மலைகளில் தொழுது கொள்ளல். (யோவான் 4:20, 1 கொரிந்தியர் 1:2)

தரம் 11

பாடம் 02

# இறைவனே படைப்பிற்கெல்லாம் மூல காரணம்

## மெசியாவால் முழுமை வாழ்வு
## (மெசியாவால் நிறைவான வாழ்வு)

மெசியா என்பதன் பொருள் 'அருட் பொழிவு பெற்றவர்' என்பதாகும். கிரேக்க மொழியில் 'கிறிஸ்டொஸ்' ஆகும். அருட் பொழிவு பெற்றவர் - இறைவனின் விசேட பொறுப்புக்களை நிறைவேற்ற அழைக்கப்பட்டுள்ளார் என்பதாகும்.

எசாயா 9:1-7 }
எசாயா 11:1-9 } மெசியா என்னும் எண்ணக்கரு → வரவிருக்கும் அரசர் - நீதியுள்ள அரசரின் வருகை.

**<u>அரச தன்மை கொண்ட மெசியா எண்ணக்கருவின் விசேட பண்புகள்</u>**


1. திருப்பாடல்கள் 89:3-4 மெசியாவும் தாவீது அரச வழி மரபும்
2. சதாகால மெசியா

   இறைவனின் சமாதான ஆட்சியை அமைப்பார்.
3. எசாயா 11:5 நேர்மையும் நீதியும் நிலைநாட்டல்

   எசாயா 9:7 நிலையான சமாதான அரசை உருவாக்குவார்.
4. எசாயா 9:4 நுகத்தை உடைத்தெறிந்து விடுதலை அளித்தல்.

   யூதா அரசுகக்கு அசீரியாவினால் அச்சுறுத்தல் காணப்பட்டது. அதனால் இஸ்ரயேல் மக்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்கினர். 'மெசியா பற்றிய எதிர்ப்பார்ப்பை மக்களுக்கு கொடுத்த எசாயா, அவர் சுமையான நுகத்தை உடைத்து விடுதலையை அளிப்பார்' என்று கூறி ஓர் எதிர்ப்பார்ப்பை மக்களுக்கு ஏற்படுத்தினர்.
5. எசாயா 9:6 வியத்தகு ஆலோசகர்
6. எசாயா 9:6 அமைதியின் அரசர்

   எசாயா 9:7 அந்த அரசில் சமாதானத்திற்கு முடிவில்லை.




மாற்கு 8:27-30 இயேசுதான் மெசியா எனும் அறிக்கை
இயேசுவைப் பற்றிய பேதுருவின் அறிக்கை

மாற்கு 10:4-5 மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்.

**இறைவாக்கினர்களின் பணிகள்**

இறைவனால் அழைக்கப்பட்டு இறை ஏவுதலால் வெளிப்படுத்தப்பட்ட இறை செய்தியை மக்களுக்கு அறிவிப்பதுடன் இறை மக்கள் கடவுளை விட்டு தூரச் சென்று தீய வாழ்வை வாழும் போது அவ்வாறான தீமைக்கு காரணமானவற்றை ஆராய்ந்து பார்த்து, தீமையிலிருந்து மக்களைக் காப்பாற்றி, மீண்டும் இறைவனிடம் கொண்டு வருவதாகும்.

தரம் 11

பாடம் 03

# ஆயத்துவம்

## நல்லாயர்

எசேக்கியல் 34:11-19 நல்ல ஆயன்

திருப்பாடல் 23 ஆண்டவரே என் ஆயர்

யோவான் 10:7-16 இயேசுவே நல்ல ஆயர்

வெள்ளி
ஓகஸ்ற் 23
2019

### திரும்பவும் பாதுகாப்பிற்குள்

வாசிப்பு - எசேக்கியேல் 34 : 11 - 15

*கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: "இதோ, நான்தானே என் ஆடுகளைப் பராமரித்து அவைகளைத் தேடிப் பார்ப்பேன்."*

---- எசேக்கியேல் 34 : 11

நான் வேலைக்குச் செல்லும்போது ஒரு ஆட்டுப் பண்ணையைத் தாண்டிச் செல்வேன். ஒரு நாள் ஒரு ஆட்டுக்குட்டி வேலிக்கு வெளியே வீதியோரத்தில் நின்று, வாகனங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்தை உணராமல் மேய்ந்ததைக் கண்டேன். வேலியின் உட்பக்கம் தாய் ஆடு அழைத்ததையும் அது கவனிக்கவில்லை.

அதற்குச் சற்றுத் தூரத்தில் எனது வாகனத்தை நிறுத்திவிட்டு, அதை எப்படி உள்ளே அனுப்பலாம் என்று யோசித்தேன். நான் அதற்கு அண்மையிற் சென்றால் சில சமயம் அது தவறான பக்கம் சென்று விபத்திற்குள்ளாகலாம் என்று நினைத்து அருகே இருந்த வீட்டை நோக்கிச் சென்றேன். வீட்டின் முன்னே நின்ற ஒருவரிடம் ஆட்டுக் குட்டியைப் பற்றிச் சொன்னேன். அவர் நன்றி கூறிவிட்டு என்னுடன் வந்து ஆட்டுக் குட்டியைத் தூக்கி வேலிக்கு மேலாக உயர்த்தி உட்பக்கத்தில் இறக்கிவிட்டார். குட்டி ஓடிச்சென்று தாயுடன் இணைந்ததைப் பார்த்ததும் சந்தோஷப் பட்டேன்.

அதன்பின் நான்என்வழியே போகும் போது, கடவுளை விட்டு நான் தூரம்போன சந்தர்ப்பங்களை நினைத்துப் பார்த்தேன். புதிய அனுபவம் குறுகிய நேரம்தான் சந்தோஷமாயிருந்தது. எனது தவறை உணர்ந்ததும் மன்னிப்புக் கேட்டு, அதே தவறைச் செய்யாது இருக்கப் பெலன் தரும்படி கேட்டேன். வேதாகம வழிகளில் நடந்தால் சரியான பாதையில் நடப்போம். நாம் தவறான பாதையில் நடப்பதை உணர்ந்து திரும்பினால், கடவுள் நம்மைப் பாதுகாத்து, சரியான பாதையில் வழிநடத்துவார்.

**ஜெபம்** - அன்பான கடவுளே, உங்கள் பாதுகாப்பிற்கும் வழி நடத்தலுக்கும் நன்றி கூறுகிறோம். **ஆமென்.**

**நாளுக்குரிய சிந்தனை** - மேய்ப்பன் தனது ஆடுகளைப் பாதுகாப்பான இடத்திற்கு வழிநடத்துவதுபோல கடவுள் என்னை வழிநடத்துகிறார்.

**ஜெபத்தேவை** - கடவுளின் வழிநடத்தலைப் பெற.

**நான்சி பிறான்ரெல் -- வேர்ஜீனியா,யூ.எஸ்.ஏ.**

**நல்லாயனின் பண்புகளை கடைப்பிடிக்க வேண்டும்.**

- இறைவன் எம் அனைவரதும் ஆயனாக செயல்படுகின்றார். – திருப்பாடல்கள் 23:1
- இறைவன் எம் ஆயனாக எம்மை பாதுகாத்து பராமரிக்கின்றார். – எசேக்கியல் 34:16
- புதிய ஏற்பாட்டின் ஆயன் இயேசு. – யோவான் 10:7
- இயேசு தனது ஆடுகளை தனிப்பட்ட ரீதியாக அறிந்திருக்கிறார். – யோவான் 10:14
- நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காக உயிர் கொடுக்கிறார். – யோவான் 10:11
- பல்வேறு சந்தர்ப்பங்களில் நாமும் மற்றவர்களுக்கு ஆயராக வழிகாட்டலையும், பாதுகாப்பையும் கொடுக்க வேண்டும்.
- நாமும் ஆயர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்ற வேண்டும்.

**நல்லாயர் தொடர்பாக திருவிவிலியத்தில் வெளிப்படும் கருத்துக்கள்**

(அ.) போசனை ஊட்டல்.
(ஆ.) வழிநடத்துதல், பராமரித்தல், தேடிக் கண்டுபிடித்தல்.
(இ.) பாதுகாத்தல், வாழ்வை அர்ப்பணித்தல்.
(ஈ.) அறிந்து வைத்திருத்தல்.

**ஆயத்துவத்தின் முன்மாதிரிகள்**

i. நாம் ஆயராக செயற்பட வேண்டிய முறைகள்
ii. நாம் ஆடுகளாக செயற்பட வேண்டிய முறைகள்

**நாம் ஆயராக செயற்படும் முறை**

(அ.) ஆயர் அன்பு
(ஆ.) அர்ப்பணிப்பு (யோவான் 10:15)
(இ.) பணி நிலை (யோவான் 10:16)

**நாம் ஆடுகளாக செயற்படும் முறை**

(அ.) ஆயரின் குரலுக்கு மாறுத்தரம் காடடல் (யோவான் 10:4-5)
(ஆ.) ஆயரின் குரலுக்கு செவிகொடுத்தல் (யோவான் 10:8)
(இ.) ஆயருக்கு விசுவாசத்துடன் கீழ்படிதல். (யோவான் 10:10)

**தீய ஆயரின் நோக்கு அழிவுக்குரியது**

யோவான் 10:10 "திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்குமன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை."

யோவான் 10:12 "கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டு விட்டு ஓடிப்போவார். ஏனெனில் அவர் ஆயரும் அல்ல; ஆடுகள் அவருக்குச் சொந்தமும் அல்ல."

செயற்பாடு :-

1. பின்வரும் திருவிவிலியப் பகுதிகளை வாசித்து, நல்ல ஆயர்/தீய ஆயரின் பண்புகளை அட்டவணையில் பூர்த்தி செய்க. திருப்பாடல்கள் 23, எசேக்கியல் 34:1-8.
2. இறைவார்த்தையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயர் பண்புகளைத் தமது வாழ்வில் பிரதிபலித்த, இரு தலைவர்களின் பெயர்களை குறிப்பிட்டு அவர்களிடம் காணப்பட்ட ஆயத்துவ பண்புகளை எழுதுக.

| **திருப்பாடல் 23**<br>**நல்ல ஆயரின் பண்புகள்** | **எசேக்கியல் 34:1-8**<br>**தீய ஆயரின் பண்புகள்** |
|---|---|
| 1. பசும் புல்வெளி மீத என்னை இளைப்பாறச் செய்வார். | 1. தாங்களே மேய்ந்து கொள்ளுகிறார்கள். |
| 2. ஆமைதியான நீர் நிலைகளுக்கு என்னை அழைத்துச் செல்வார். | 2. கொழுப்பானதை உண்டு |
| 3. எனக்கு புத்துயிர் அளிப்பார். | 3. ஆட்டு மயிராடையை உடுத்தி |
| 4. என்னை நீதி வழி நடத்துவார். | 4. மந்தையில் சிறந்ததை அடிக்கிறார்கள். |
| 5. நீர் என்னோடு இருப்பதால், எத் தீங்கிற்கும் அஞ்சிடேன். | 5. மந்தையையோ மேய்பதில்லை. |
| 6. உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும். | 6. நலிந்தவற்றை திடப்படுத்தவில்லை. |
| 7. என் தலையில் நறுமணத் தைலம் பூசுகின்றீர் | 7. பிணியுற்றவற்றிக்குக் குணமளிக்கவில்லை. |
| 8. என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் ரேன்பும் எனைப் புடை சூழ்ந்து வரும் | 8. காயமுற்றவற்றிக்கு கட்டு போடவில்லை. |
| 9. நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன். | 9. வழி தப்பியவற்றை திரும்ப கூட்டி வரவில்லை. |
| | 10. காணாமல் போனவற்றை தேடவில்லை. |
| | 11. கொடுமையுடனும் வன்முறையுடனும் நடத்தினீர்கள். |
| | 12. ஆயன் இல்லாமையால் அலை அலைந்து திரிந்தன. காட்டு விலங்குகளுக்கு இரையாயின. |
| | 13. எவ்விடத்தில் என் மந்தை சிதறுண்டு போனது. அதை தேடவோ, கூட்டிச் சேர்க்கவோ எவரும் இல்லை. |

தரம் 11

பாடம் 04

# துன்புறும் பணியாளர்

பணியாளனாக துன்புறுதலை எதிர் நோக்க வேண்டும். வாழ்க்கையில் சாதகமான, பாதகமான சந்தர்ப்பங்கள்.

| <u>**சாதகமான சந்தர்ப்பங்கள்**</u> | <u>**பாதகமான சந்தர்ப்பங்கள்**</u> |
|---|---|
|  |  |
| 1. காலை என் தியான நேரம் | 1. என் தியான நேரம் தவறவிடப்படும் போது |
| 2. பாராட்டப்படும் போது | 2. ஏச்சு வாங்கும் போது |
| 3. சிறிது ஓய்வு கிடைக்கும் போது | 3. ஓய்வே இல்லாமல் வேலையாக இருக்கும் போது |
| 4. எனது கடமைகளை சரியான நேரத்தில் செய்து முடிக்கும் போது | 4. கடமைகளை சரியான நேரத்திற்கு செய்து முடியாமல் போகும் போது |
| 5. பயிற்சி வகுப்புகள் நடத்தும் நேரம் | 5. வீட்டிலுள்ளவர்கள் நோய்வாய் படும் போது |
| 6. பிரயாணம் செய்யும் போது | |
| 7. பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள் வீட்டிற்கு வரும்போது | |

- ❖ துன்பங்களுக்கு முகங்கொடுத்த பணியாளராகிய இயேசு
- ❖ திருப்பணியின் போது நாமும் துன்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டும்.
- ❖ துன்பங்களுக்கு மத்தியில் துணிவுடன் ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டும்.
- ❖ துன்பங்களை துணிவுடன் எதிர் கொள்ள வேண்டும்.
- ❖ இறைபணியில் பின் நிற்காது ஒன்றினைந்து செயல்பட வேண்டும்.

யோபு 1:1 நேர்மையும், மாசற்றவரும், கடவுளுக்கு அஞ்சி தீயதை விலக்கி வந்த யோபுவும் துன்பங்களுக்கு முகங்கொடுத்தார்.

- ❖ இறைவனுக்காக துன்பப்படுதல் இறையரசின் இரகசியம் ஆகும்.

யோபு 1:22 அனைத்து துன்பங்களிலும் பாவம் செய்வதில் இருந்து விலகி இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| எரேமியா 38:5-6 | திருப்பணியாளர்களுக்கும் பணியின் போது துன்பங்கள் ஏற்படுகின்றன. எரேமியா பாழுங்கிணற்றில் போடப்பட்டார். உணவின்றி பல நாட்கள் இருந்தார். |
| எரேமியா 38:1-7 | துன்பங்களுக்கு மத்தியில் பணியாற்ற அழைப்பு கிடைக்கும். |
| எசாயா 53:1-8 | துன்புறும் ஊழியன் அனுபவிக்கும் துன்பம் பாரதூரமானது. |

**துன்புறும் பணியாளனாகிய இயேசுவில் வெளிப்படும் இறையன்பின் மகத்துவம்**

- எசாயா 42:1 அவர் ஆண்டவரின் ஆவியைப் பெற்றவர்.
- எசாயா 42:2 அதிகார ஆளுமைத் தொனியை விட மென்மை குரலுடையவர்.
- எசாயா 42:3 துயருற்றவர்களை மீண்டும் துன்புற விடமாட்டார்.
- எசாயா 42:4 நீதியை நிலைநாட்டும் வரை மனம் தளராது நீதி நெறிக்காகச் செயற்படுவார்.
- எசாயா 50:2 நாம் பார்ப்பதற்கு அழகிய அமைப்பொ விரும்பத்தக்க தோற்றமோ அவருக்கு இல்லை.
- எசாயா 53:3 வேதனையுற்ற மனிதராகக் காணப்பட்டார்.
- எசாயா 53:5 அவர் தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்.
- எசாயா 53:10 அவர் தம் உயிரை மானிடரின் குற்றங்களை நீக்கும் பலியாகத் தந்தார்.
- எசாயா 53:12[b] பலரின் பாவத்தை சுமந்தார்.
  கொடியோருக்காகப் பரிந்து பேசினார்.

<u>செயற்பாடு :-</u>

1. எசாயா 42:104 இல் காணப்படும் துன்புறும் பணியாளரின் பண்புகள் நான்கு எழுதுக.
   i. ஆண்டவரின் ஊழியர்
   ii. மக்களினங்களுக்கு நீதி வழங்குவார்.
   iii. அவர் கூக்குரலிடமாட்டார்.
   iv. தம் குரலை உயர்த்தமாட்டார்.
   v. தம் குரலொலியைத் தெருவில் எழுப்பமாட்டார்.
   vi. நெரிந்த நாணலை முறியார்.
   vii. மங்கி எரியும் திரியை அனையார்.
   viii. உண்மையாகவே நீதியை நிலை நாட்டுவார்.
   ix. உலகில் நீதியை நிலைநாட்டும் வரை அவர் சோர்வடையமாட்டார்.
   x. மனந்தளரமாட்டார்.
2. நெல்சன் மண்டெலா, தந்தை மைக்கல் ரொட்றிகொ என்பவர்களைப் பற்றிய தகவல்களைத் தேடி அவர்களின் வாழ்வில் நாம் பெறக்கூடிய பண்புகள் இவ்விரண்டு எழுதுக.

# **<u>நெல்சன் மண்டெலா (Nelson Mandela)</u>**



| 2008 இல் மண்டேலா<br>தென்னாப்பிரிக்காவின் அரசுத் தலைவர் பதவியில்<br>1994 மே 10 – 1999 ஜூன் 14 | |
|---|---|
| **முன்னவர்** | பிரெடெரிக் வில்லியம் டி கிளார்க் |
| **பின்வந்தவர்** | தாபோ உம்பெக்கி |
| **அணி சேரா இயக்கப் பொதுச் செயலாளர் பதவியில்<br>1998 செப்டெம்பர் 3 – 1999 ஜூன் 14** | |
| **முன்னவர்** | அண்டிரெஸ் பாஸ்திரானா அராங்கோ |
| **பின்வந்தவர்** | தாபோ உம்பெக்கி |
| **தனிநபர் தகவல்** | |
| **பிறப்பு** | நெல்சன் ரொலிலாலா மண்டேலா<br>1918 ஜூலை 18<br>முவெசோ, தென்னாப்பிரிக்கா |
| **இறப்பு** | 2013 டிசம்பர் 5 (அகவை 95) |
| **அரசியல் கட்சி** | ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரஸ் |
| **வாழ்க்கை துணைவர்(கள்)** | எவெலின் மாசே (1944–1957)<br>வின்னி மண்டேலா (1957–1996)<br>கிராசா மாச்செல் (1998–இன்று) |
| **இருப்பிடம்** | ஹூஸ்டன் எஸ்டேட்,<br>தென்னாப்பிரிக்கா |

Nelson Mandela became South Africa's First Black President after winning their country's first multiracial election. He was imprisoned for 27 years for demanding equal rights of black people in South Africa. He was awarded the Nobel Peace Prize in 1993.

1. தன் இன மக்களுக்காக சம உரிமை கேட்டு போராடினார்.
2. அதன் காரணமாக 27 வருடங்கள் சிறையில் இருந்தார்.
3. மனம் தளர்ந்து போகவில்லை.

## தந்தை மைக்கல் ரொட்றிகோ
## Prophet Priest 1927 – 1987.11.10



இவர் 2 Phd பட்டம் பெற்றவர். ஊவா பிரதேசத்தில் குருமனையை ஆரம்பித்தார். மறை மாவட்டத்துக்கு ஏற்ற குருக்களை நியமித்தார். புத்தளை கிராமத்தில் கிறிஸ்தவர்கள் இல்லை. ஆனால் அந்த மக்களின் தேவைகளை அறிந்து (நிலம் சம்பந்தமாக அவர்களுக்காக குரல் எழுப்பினார். அதன் காரணமாக ஆராதனை வேளையில் தலையில் குண்டடிப்பட்டு மூளை சிதறி இரத்த சாட்சியாக மாண்டார். (வளமான எதிர்ககாலத்திற்காக விடாமுயற்சியுடனும் நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் செயற்பட்டார்.)

தந்தை மைக்கல் ரொட்றிகொ அவர்கள் அன்பையும் அகிம்சையும் கொண்டு மக்களின் போராட்டங்களில் ஈடுபட்டார். இந்த காரணத்திற்காகவே அவர் கொல்லப்பட்டார்.

தரம் 11

பாடம் 05

# ஆண்டவர் இயேசுவின் முழுமையான வாழ்வினாலும் பணியினாலும் வாழ்வில் புத்தொளி பெற வேண்டும்.

## அன்பு செலுத்தி வாழ்வோம்

- மனிதனுக்கான இறையன்பு உலக ஆரம்பத்தில் உருவாகியது.
- மனிதனின் கீழ்ப்படியாமை, பேராசை என்பவற்றால் இறையன்பிலிருந்து விலகி விடும் நிலை ஏற்பட்டது.
- இதனால் மனித உள்ளம் மாசடைந்தது. இருப்பினும் இறைவன் மனிதனிடம் காட்டிய அன்பானது எந்த வகையிலும் குறையவில்லை.
- இறையன்பிலிருந்து தூர விலகி சென்று மனிதன் மாசு நிறைந்த நிலைக்கு ஆளாக்கப்படுவதற்குரிய காரணிகள்.
    - பலிவாங்குதல்
    - பொறுமையற்ற நிலை
    - பொறாமை
    - சுய கௌரவம்
    - இரக்கமற்ற நிலை
    - தன்னலம்
    - கோபம்
    - பெருமை
    - குரோதம்
    - சுயநலம்

<u>**பவுல் கொரிந்து மக்களுக்கு**</u> எழுதிய திருமுகத்தில்

"அன்பு வழிகள்" 1 கொரிந்தியது 13:1-13

அன்பின் அடிப்படையில் உருவாகும் கிறிஸ்தவ வாழ்வின் பண்புகள்.

- பொறுமையுள்ளது
- இரக்கமுள்ளது
- பொறாமையற்றது
- தற்புகழ்ச்சி கொள்ளாது
- இறுமாப்பு அடையாது
- இழிவானதை செய்யாது

- ❖ தன்னலம் நாடாது
- ❖ எரிச்சலுக்கு இடம் கொடாது
- ❖ தீங்கு நினையாது
- ❖ தீவினையில் மகிழ்வுறாது
- ❖ உண்மையில் மகிழும்
- ❖ அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்
- ❖ அனைத்தையும் நம்பும்
- ❖ அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்
- ❖ மன உறுதியாய் இருக்கும்
- ❖ அன்பு ஒருபோதும் அழியாது

**<u>'அன்பு' குறித்து இயேசு கூறிய பகுதிகள்</u>**

மாற்கு 12:29-33

i. முழுவாழ்விலும் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்தல்

ii. தன்னில் அன்பு கூர்வது போல் பிறரிலும் அன்பு கூர்தல்

**பவுல் எழுதிய திருமுகம் எபேசியர் 3:17-19**

அன்பு என்பது செயல்களினால் விளக்கப்பட வேண்டிய ஒன்று, அதனை வார்த்தைகளால் விளக்கிட முடியாது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **SOAP** - | **S** | – | Scripture | - | வேதாகமம் |
| | **O** | - | Observation | - | கவனித்தல் |
| | **A** | - | Application | - | பயன்பாடு |
| | **P** | - | Prayer | - | ஜெபம் |

தரம் 11

பாடம் 06

# சமாதானத்துக்கு அர்ப்பணிப்போம்

## நீதி நிறைந்த சமாதான வாழ்வில் ஆர்வம் காட்ட வேண்டும்

- ❖ சமாதானம் குறித்து கதைக்கும் போது அது நீதியுடன் தொடர்புடையது.
- ❖ பாரிய அர்ப்பணிப்பால் மட்டுமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.
- ❖ சமாதானத்தை உருவாக்க செயல்பட (வேலை) வேண்டும்.
- ❖ அநீதிக்கு எதிராக இணைந்து செயற்பட வேண்டும்.

**நீதீ** ⇄ **சமாதானம்**

**மத்தேயு 5:9-12**

| | |
|---|---|
| 5:9-10 | “அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர். நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.” |
| எசாயா 9:6-7 | “ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்; ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும்; அவர் திருப்பெயரோ ‘வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்’ என்று அழைக்கப்படும். அவரது ஆட்சியின் உயர்வுக்கும் அமைதி நிலவும் அவரது அரசின் வளர்ச்சிக்கும் முடிவு இராது; தாவீதின் அரியணையில் அமர்ந்து தாவீதின் அரசை நிலைநாட்டுவார்; இன்றுமுதல் என்றென்றும் நீதியோடும் நேர்மையோடும் ஆட்சிபுரிந்து அதை நிலை பெயராது உறுதிப்படுத்துவார்; படைகளின் ஆண்டவரது பேரார்வம் இதைச் செய்து நிறைவேற்றும்.”. |

**முழுமையான சமாதானம்**
- → **சாலோம்** → **எபிரேய சொல்**
- → **ஐரோனியா** → **கிரேக்க சொல்**

<u>**அருட் தந்தை சந்திரா பர்னாந்து (மார்சல் கிறிஸ்டி பர்னாந்து)**</u>

இவர் இலங்கை கிறிஸ்தவ சபையில் சமாதானத்துக்காக மக்களின் நன்மைக்காக தனத வாழ்வை அர்ப்பணித்தார்.

<u>**அருட் தந்தை திஸ்ஸ பாலசூரிய**</u>

இவர் சமூக நலத்தை கட்டியெழுப்பி சமாதானத்தை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் உழைத்தார்.

தரம் 11


பாடம் 07

## மன்னிப்பை அனுபவத்தில் காண்போம்

மனுக்குலத்தில் (கிறிஸ்தவர்களில்) காணப்படும் ஒரு இறை பண்பாக மன்னிப்பை நாம் குறிப்பிடலாம். நம் ஆண்டவர் இயேசு தன் வாழ்வில் மன்னிப்பை முன்மாதிரியாக செயற்படுத்தினார்.

மத்தேயு 6:12 "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும்."

- ❖ மன்னித்தல் அவசியம்
- ❖ மன்னிப்பளித்தல் இறை பண்பு என்பதை விசுவாசிக்க வேண்டும்.
- ❖ ஒருவரை ஒருவர் மன்னித்து வாழ வேண்டும்.
- ❖ கோபம் ஏற்படும் போதும் தவறிழைக்கக்கூடாது.
- ❖ நாம் மன்னிப்பை பெற வேண்டும்.
- ❖ நாம் பிறரை மன்னிக்க வேண்டும்.
- ❖ மன்னிப்பு வழங்கி மன்னிப்பு பெற வேண்டும்.
- ❖ நாம் எப்போதும் அன்புடன் செயற்பட வேண்டும்.
- ❖ மன்னிப்பளித்தலில் எல்லை இல்லை $7^{70}$ (மத்தேயு 18:21-22)
- ❖ முழு மனதோடும் மன்னிப்பளித்தல் வேண்டும்.
- ❖ இரக்கத்துடன் மன்னிப்பு வழங்க வேண்டும்.
- ❖ மன்னிப்பு வழங்குவதால் மகிழ்வு, மன நிறைவு, மன ஆறுதல் ஏற்படும்.
- ❖ பகைவரையும் மன்னிக்க வேண்டும்.



**மத்தேயு 18:21-22 மன்னிப்பு எல்யைற்றது**

பேதுரு விடயம் இயேசு கூறியது “ஏழு முறை மட்டுமல்ல; எழுபது தடவை ஏழு முறை. ($7^{70}$) ”

**இரண்டாம் ஜுவாம் பவுல்**

பிறந்த திகதி 1920 மே 18 – போலந்து நாட்டில்

1981 மே 13 ஆம் திகதியன்று தருக்கி இன அலி அக்னார் என்பவரால் வெடிகுண்டினால் தாக்கப்பட்டார். ஆனால் இலக்கு தவறியது.

- ஆனால் இரண்டாம் ஜுவாம் பவுல் அலி அக்னார் இருந்த சிறைக்குச் சென்று “நீ செய்த தவறுக்கு நான் மன்னிப்பு வழங்குகின்றேன்.” என்று கூறி மன்னிப்பு வழங்கினார்.

**அருட்பணி பீற்றர் ஜெராட் டி சில்வா**

- 1840 ல் மெதடிஸ்த திரு அவையைச் சேர்ந்த இவர் அங்குலான பிரதேசத்தில் நடாத்திய நற்செய்தி புரட்சி குறிப்பிடப்படவேண்டியது.
- சிலர் நற்செய்தியை கேட்டனர். சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர்.
- இவர் மேல் சாணத்தை வீச தயாராக இருந்தனர்.
- ஆனால் ஆங்கிலேயரான பாணந்துறை நீதிபதியின் மேல் சாணம் வீசப்பட்டது.
- அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.
- இதனை அறிந்த பீற்றர் ஜெராட் சிறைக்குச் சென்று அவர்களுடன் பேசி மன்னிப்பு வழங்கினார்.
- சிறையிலிருந்து விடுதலை பெற்ற அவர்கள் மெதடிஸ்தர்களாக மாறினர்.

- மன்னிப்பு வழங்கல் என்னும் சிறப்பான பண்பை உலகுக்கு வெளிப்படுத்தியவர் எவ்வித குற்றமும் செய்யாத **இயேசுவே** ஆகும்.

**மன்னிக்க மறுத்த பணியாள் உவமை**

மத்தேயு 18:21-35

- அதிக கடன் பெற்ற பணியாள் தனது கடனை மன்னிக்குமாறு தலைவரிடம் வேண்டினார்.
- தலைவர் பரிவு கொண்டு அவனை விடுவித்து கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார்.
- மன்னிப்பைப் பெற்ற பணியாளர் தன்னிடம் கடன் பெற்றவரிடம் கடனை திருப்பித் தரும் வரையில் அவனைச் சிறையில் அடைத்தார்.
- தலைவர் சினமடைந்து அவருக்கு தண்டனை வழங்கினார்.

தரம் 11

பாடம் 08

# ஒருமைப்பாட்டுடன் வாழ்வோம்
# (வேறுபாடுகளில் ஒருமைப்பாட்டைக் காண்போம்)

- ❖ திருச்சபை ஒன்றிப்புக்காக மன்றாடுவதோடு செயற்பட வேண்டும்.
- ❖ வேறுபாடுகளில் ஒருமைப்பாட்டுடன் செயற்பட வேண்டும்.

(பலவகை மலர்கள் ஒரு பூக்குவளையொன்றில் இருக்கும் போது எவ்வளவு அழகாக இருக்கின்றது. அவ்வாறே பல்வேறுப்பட்ட தன்மையான உடையவர்கள் ஒன்றுபடும் போது அது அழகாக இருக்கும்.)

**யோவான் 15:1-1 இயேசுவே உண்மையான திராட்சைச் செடி**

- ❖ கனி கொடாத அனைத்து கொடிகளும் தறித்து எறியப்படும். கனி கொடுக்கும் கொடிகள் இணைந்திருக்கும்.
- ❖ கனி கொடுக்காத செடிகள் இயேசுவோடு இணைந்திருந்தாலும் இறை குணாதிசயங்களை உலகிற்கு வெளிப்படுத்தாமல் செயற்படுகின்றவர்களாவார்கள். எனவே, இவர்கள் இறையரசுக்கு பிரயோஜனம் அற்ற கொடிகளாக காணப்படுகின்றனர்.

யோவான் 15:6 “என்னோடு இணைந்து இராதவர் கொடியைப் போலத் தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார்.”

கனி கொடுப்போர் இறையரசு நிலவுவதற்கு பிரயோஜனமாக வாழ்பவராவர்.

**யோவான் 17:20-23 இயேசுவின் வேண்டல்** (கட்டாயம் வாசிக்கவும்)

22 ஆம் வசனம் “நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன்.”

இன்றைய காலத்தில் வாழும் நாம், சபைகளின் ஒன்றிணைப்பிற்காக முயற்சிக்கும் பல நிறுவனங்களைக் காண்கின்றோம்.

- ❖ இலங்கை கிறிஸ்தவ மன்றம் (NCCSL)
- ❖ இலங்கை இறையியல் கல்லூரி
- ❖ இலங்கை வேதாகம சங்கம் (றோமன் கத்தோலிக்கம் உட்பட)
- ❖ வாலிப கிறிஸ்தவ இயக்கம் (YMCA)
- ❖ கிறிஸ்தவ வாலிப பெண்களின் சங்கம் (YWCA)
- ❖ கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவம் (CWF)

| | |
|---|---|
| கலாத்தியர் 3:28-29 | "இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை; கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தவர்களும் ஆபிரகாமின் வழித் தோன்றல்களுமாய் இருக்கிறீர்கள். வாக்குறுதியின் அடிப்படையில் உரிமைப்பேறு உடையவர்களாயும் இருக்கிறீகள்." |
| எபேசியர் 2:14-16 | யூதருக்கும் பிற இனத்தாருக்கும் இடையில் இருக்க வேண்டிய இணைப்பு (கட்டாயம் வாசிக்கவும்.) |

மேலே குறிப்பிட்ட திருமறைப் பகுதியின் கருத்து, இயேசு மனுவுரு ஏற்றதன் மூலம் யூதரையும் பிற இனத்தாரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரைத் தகர்த்தெறிந்தார்.

பிற இனத்தாரை வேறுபடுத்துவதற்காக காணப்பட்ட பல கட்டளைகளையும் விதிகளையும் கொண்ட சட்டத்தை அழித்தார். சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கி கடவுளோடு ஒப்புரவாக்கினார்.

சபைகள் பலவகை இருப்பினும் கிறிஸ்துவுக்குள் நாம் அனைவரும் ஒரு குடும்பமே ஆகும்.

<u>செயற்பாடு :-</u>

கிறிஸ்தவர்களாக நாம் ஏனைய மக்களுடன் ஒற்றுமையுடன் செயற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் 5 தருக.

i. இலவச மருத்துவ முகாம்
ii. சிரமதானம்
iii. மரண வீடு
iv. நலன்புர சேவைகள்

தரம் 11

பாடம் 09

# எதிர்நோக்குதலும் நிலைவாழ்வும்
## (எதிர்ப்பார்ப்பும் நிலையான வாழ்வும்)

எமது வாழ்வின் குறிக்கோள்களை மிகவும் பிரயோஜனமாகவும் இவ்வுககிற்கும் மறுவாழ்விற்கும் தொடர்பான உண்மைகளை அறிந்து கொள்வதற்கும் எம்மிடம் இருக்க வேண்டிய எமது ஆன்மீக பெறுமதிகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

தொடக்க நூல் 12:1 “உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல்.” எனக் கடவுள் கூறிய போது ஆபிரகாம் அக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பயணத்தை ஆரம்பித்தார்.

அவ்வாறே மோசேயும் எகிப்தில் துன்புற்ற மக்களின் விடுதலைக்காக முன்வந்தது கடவுளின் மீது அவர் கொண்டிருந்த எதிர்பார்ப்பின் நம்பிக்கை ஆகும்.

கிறிஸ்தவர்களான எமது எதிர்பார்ப்பு கிறிஸ்துவே ஆகும். அவரில் நம்பிக்கைக் கொண்டு அவரோடு ஒன்றினைவதேயாகும்.

உரோமையர் 5:1-16 கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் புது வாழ்வு

உரோமையர் 5:1-11 கடவுளுக்கு ஏற்புடையவராதலால் விளையும் பயன்.

உரோமையர் 5:4-5 “மன உறுதியால் தகைமையும், தகைமையால் எதிர்நோக்கும் விளையும் என அறிந்திருக்கிறோம். அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது; எனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது.”

துன்பங்களை அனுபவிக்கும் போது பெரு மகிழ்வு கொள்ள யாருக்கு முடியும் ? தூய ஆவியானவரின் உதவியுடன் கிறிஸ்துவில் நிலைத்திருப்பவர்களுக்கு மட்டுமே துன்பங்களை அனுபவிக்கும் போது பெரு மகிழ்வு கொள்வதுடன் கிறிஸ்துவுக்குள் நிலைவாழ்வு வாழ முடியும்.


யோவான் 17:2-3 “ஏனெனில், நீர் அவரிடம் ஒப்படைத்தவர்கள் அனைவருக்கும் அவர் நிலைவாழ்வை அருளுமாறு மனிதர் அனைவர் மீதும் அவருக்கு அதிகாரம் அளித்துள்ளீர். உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு.”

கிறிஸ்து இயேசுவின் மூலம் எமக்கு உரிமையாகும் எதிர்நோக்கும் பூரணமான நிலை வாழ்வை நாம் நிறைவேற்றிக் கொள்ள எம் வாழ்விற்கான மூன்று கருத்துக்கள்.


1. நீதி
2. தூய்மை
3. பெரு மகிழ்வு

**1. <u>நீதி</u> பிலிப்பியர் 3:7-11**

மேலேயுள்ள திருமறைப் பகுதியில் பவுல் நீதியான வாழ்வைக் கட்டி எழுப்புவதற்காக முக்கியமான காரணங்களை முன் வைக்கிறார்.




**2. <u>தூய்மை</u> 1 பேதுரு 1:13-21**



3. <u>பெருமகிழ்வு</u> **உரோமையர் 5:2**

"நாம் இப்போது அருள்நிலையைப் பெற்றிருக்கிறோம். இந்நிலையை அடையும் உரிமை இயேசு கிறிஸ்துமீது கொண்ட நம்பிக்கையால் தான் அவர் வழியாகவே நமக்குக் கிடைத்தது. கடவுளின் மாட்சியில் பங்குபெறுவோம் என்னும் எதிர்நோக்கில் நாம் பெருமகிழ்வும் கொள்ள முடிகிறது."

<u>செயற்பாடு :-</u>

நிலை வாழ்வைப் பற்றிக் கொள்வதற்கு தேவையான காரியங்களை பெயரிடுக.

1. தீமை உங்களை வெல்லவிடாதீர்கள், நன்மையால் தீமையை வெல்லுங்கள்!
   (உரோமையர் 12:21)
2. கிறிஸ்துவில் (சிலுவை தியாக பலியில்) நம்பிக்கை கொள்ள வேண்டும்.
3. இறைவனுக்கு அஞ்சி வாழ வேண்டும்.
4. நித்திய வாழ்வு பற்றி பிறருக்கு கூற வேண்டும்.
5. கிறிஸ்துவுடன் கிட்டிய தொடர்பு கொள்ள வேண்டும். (பிலிப்பியர் 3:7)
6. எதிர்காலத்தில் கிடைக்கும் இறை வரப்பிரசாதத்துக்காக மகிழ்ச்சி அடைய வேண்டும்.
   (உரோமையர் 5:2)
7. துன்பங்களின் மத்தியிலும் தூய ஆவியானவர் நம்மை நடத்துவார். கடவுளின் அன்பு எமக்கு கிடைக்கின்றது என நம்பிக்கை கொள்ள வேண்டும். (உரோமையர் 5:5)
8. இயேசு கிறிஸ்துவுக்குள் தூய்மையுள்ள நடத்தை உள்ளவர்களாய் வாழ வேண்டும்.

தரம் 11

பாடம் 10

# தூய ஆவியானவரால் துணிவு பெற்று புது வாழ்வின் அனுபவத்தை பெற வேண்டும்

## ஆதி கிறிஸ்தவ சபையின் முன்மாதிரி

“சபை” என்பது கடவுளின் பிள்ளைகளாக ஒரு சிலரோ அல்லது அநேகரோ ஒன்று கூடும் இடம்.

**ஆதிச் திருச்சபையின் ஆரம்பம்**

இயேசு உயிர்த்தெழுந்து 50 நாட்களில் பின் பெந்தகொஸ்து விழா கொண்டாடப்படும் (யூதர்களின் அறுவடை விழா. எருசலேம் தேவாலயத்திற்குச் செல்வர்.)

திருத்தூதர் பணிகள் 2:1-3 முதல் திருச்சபை மக்கள் தூய ஆவியைப் பெற்று ஒரே மனதுடன் வாழ்ந்தனர்.

திருத்தூதர் பணிகள் 2:38-41 மனம்மாறி பாவங்களிலிருந்து மன்னிப்பு பெற்று கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்கு பெற பேதுரு அறைகூவலிடுகிறார்.

திருத்தூதர் பணிகள் 2:42 கற்பித்தல், நற்புறவுடன் வாழல், அப்பம் பிட்குதல், இறைவேண்டுதலில் நிலைத்திருத்தல் என்பவற்றில் உறுதியாய் நிலைத்திருந்தனர்.

திருத்தூதர் பணிகள் 2:45, 4:34-37 தமது உடைமைகளைப் பொதுவாகப் பாவித்தனர்.

திருத்தூதர் பணிகள் 2:43, 4:15-16 தூயாவியின் வல்லமையால் பல அருஞ்செயல்களும் அற்புதங்களும் இடம்பெற்றன. (4:15 – பேதுருவையும் யோவானையும் சங்கத்தை விட்டு வெளியேறும்படி ஆணையிட்டனர். அது குறித்து தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.)

திருத்தூதர் பணிகள் 2:47 கடவுளைப் போற்றி மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று வாழ்ந்தனர்.


திருத்தூதர் பணிகள் 2:47 திருச்சபை நாள்தோறும் வளர்ந்து வந்தது.

திருத்தூதர் பணிகள் 4:33 திருத்தூதர் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் என்று சான்று பகிர்ந்தனர்.

| | |
|---|---|
| திருத்தூதர் பணிகள் 6:2 | திருத்தூதர் இறைவார்த்தையை போதிப்பதிலும் சமூக பணி செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர். |
| திருத்தூதர் பணிகள் 6:3 | நன்சான்று பெற்றவர்களும் தூய ஆவி அருளும் வல்லமையும் ஞானமும் நிறைந்தவர்கள் 7 பேர் திருத்தொண்டர்களாக நியமிக்கப்பட்டனர். |

இவற்றை கற்கும் நாம்,

- ❖ இறைவார்த்தையை அறிவிக்க வேண்டும்.
- ❖ சமூக (நலன்புரி) பணிகள் செய்யவேண்டும்.
- ❖ முதல் கிறிஸ்தவ சபையின் விழுமியங்களை முன்மாதிரியாகக் கொண்டு வாழ வேண்டும்.




1. **இடைவிடாத ஜெபவாழ்வு**

- ❖ இடைவிடாது ஒவ்வொரு நாளும் ஒரு மனதோடு தேவாலயத்தில் கூடி வந்தனர்.
- ❖ வீடுகள் தோறும் சென்று அப்பம் பிட்டனர்.
- ❖ ஒன்று கூடினர்.
- ❖ இடைவிடாது ஜெபத்தில் தரித்திருந்தனர்.
- ❖ திருத்தூதரின் கற்பித்தல் நிகழ்ந்தது.
- ❖ கடவுளை போற்றி மகிமைப்படுத்தினர்.
- ❖ இறை பயத்தோடு கடவுளைப் போற்றி வந்தனர்.

இவற்றை கற்ற நாம்,

1. இறைவழிபாட்டில் ஆர்வத்தோடு: பங்கு கொள்ள வேண்டும்.
2. அப்பம் பிட்குதலில் ஒன்றினைய வேண்டும்.
3. ஜெபத்தினூடாக தைரியமாக வாழ்வைக் கொண்டு செல்ல வேண்டும்.
4. இறைவார்த்தையை ஏற்று அதனுடைய வாழ்வை சீர் செய்ய வேண்டும்.

## 2. மறை தூதுப் பணியில் ஈடுபடுதல்

(அ.) மறைத்தூது பணி (ஆ.) நலன்புரி பணிகள்

திருத்தூதர் பணிகள் 2:44-45 "நம்பிக்கைக் கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர்; எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுலன்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர்."

ஆதித் திருச்சபையிலும் மறைத்தூது பணியிலும் நலன் புரியும் பணிகளிலும், அவற்றை முன்னோக்கி கொண்டு செல்ல தடைகள் ஏற்பட்டன.

நலன்புரி பணியில் ஏற்பட்ட தடைகளை நீக்க திருத் தொண்டர்களை நியமித்தனர்
திருத்தூதர் பணிகள் 6:1-6

மறைத்தூதுப் பணி செய்தவர்கள் சிதறுண்டு போனார்கள். இப்படி சிதறிய மக்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்து வந்தனர்.
திருத்தூதர் பணிகள் 8:4

திருத்தூதர் பணிகள் 5:39 "அவை கடவுளைச் சார்ந்தவை என்றால் நீங்கள் அவற்றை ஒழிக்க முடியாது; நீங்கள் கடவுளோடு போரிடுபவர்களாகவும் ஆவீர்கள்."

<u>செயற்பாடு :-</u>

நீர் வாழும் பிரதேசத்தில் மறைத்தூது பணியையும் நலன்புரிப் பணியையும் நிறைவேற்றும் போது முகம் கொடுக்க வேண்டியசவால்களையும், அதனை வெற்றி கொள்ளும் முறைகளையும் கிறிஸ்தவ மாணவராகிய நீர் எவ்வாறு மேற் கொள்வீர் ?

| | |
|---|---|
| ❖ பிற மதத்தினர் எதிர்ப்பு தெரிவித்தல் | ❖ அவர்களையும் இணைத்து செயல்பட வேண்டும். |
| ❖ கிறிஸ்தவர்கள் மட்டுமே பொறுப்பை எடுத்துக் கொள்ளுதல் | ❖ மற்றவர்களுக்குப் பொறுப்புகளை பகிர்ந்து கொடுத்தல் |
| ❖ நிதி நெருக்கடி | ❖ மற்றவர்களிடமும் இணைந்து நிதி திரட்டுதல் |
| ❖ மறைத்தூது பணியை நிறைவேற்ற முடியாமை | ❖ மற்ற மதத்தினைரையும், அவர்களது மதங்களையும் அவதூறு பண்ணாமல் செயல்படுதல். |

தரம் 11

பாடம் 11

# தூய ஆவியானவரால் துணிவு பெற்று புது வாழ்வின் அனுபவத்தை பெற வேண்டும்

# கிறிஸ்துவுக்காக கனி தரும் பணிக்கு தம்மை ஒப்படைக்க வேண்டும் (பலன் தரும் பணி)

**பேதுரு :- (கற்பாறை)**

இவருடைய முந்தின பெயர் சீமோன் (கேட்கிறவன்). இவன் யோனாவின் மகன். பேதுருவின் சகோதரர் அந்திரேயா. பேதுரு, அந்திரேயா, யோவான், யாக்கோபு இவர்கள் மீன் பிடிகாரர். இவர்கள் நால்வரும் திருமுழுக்கு யோவானின் சீஷர்கள். அந்திரேயா, பேதுருவை இயேசுவிடம் கூட்டி வந்தார். இயேசு, பேதுருவுக்கு பாறை என்று அர்த்தங்கொண்ட 'கேபா' என்னும் மறுநாமத்தை சூட்டினார். சில நாட்களின் பின்னர் இவர்கள் இயேசுவின் சீஷர்கள் ஆனார்கள்.

சீஷர்கள் எல்லோருகுள்ளும் பேதுருவுக்கே முதலிடம் கிடைத்தது. (பேதுரு, "ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மை பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன்." என்றார்.) லூக்கா 22:33. "அதற்கு பேதுரு, ஆண்டவரே உம்மோடு சிறையிடப்படுவதிற்கும் ஏன், சாவதற்கும் நான் ஆயத்தமாய் உள்ளேன்." என்றார். ஆனாலும் தருணம் கிட்டியபோது, அவரை முற்றாய் மறுதலித்தான். எனினும் உயிர்த்தெழுந்த இயேசு பேதுருவுக்கே முதற் தரிசனமானார்.

ஊழிய அளவில், 'திருத்தூதர் பணிகள்' முதற் பாகம் முழுவதிலும் பேதுருவின் ஊழியத்தைப் பற்றியெ கூறப்பட்டிருக்கிறது. கடைசியாக இவரே ஆண்டவர் அடைந்ததைப் போன்ற மரணத்தில் பங்கு பெற்றார். இதிலும், தன்னைத் தலை கீழாகச் சிலுவையில் அறையும்படி கேட்டு, அப்படியே இரத்த சாட்சியாய் மரித்தார். (கி.பி. 68 வருடம்)

| | |
|---|---|
| திருத்தூதர் பணிகள் 2:14-16 | தூயாவியால் நிரப்பப்பட்ட பேதுருவின் துணிவு |
| திருத்தூதர் பணிகள் 2:17-36 | பெந்தகொஸ்து நாளில் பேதுருவின் அருளுரை |
| திருத்தூதர் பணிகள் 3:1-10 | பேதுருவின் குணப்படுத்தல் பணி. - கோவிலின் வாயிலில் கால் ஊனமற்றவரை குணப்படுத்தல். |
| திருத்தூதர் பணிகள் 4:12-22 | சவால்களின் மத்தியில் துணிவான பணி<br>திருத்தூதர் பணிகள் 4:8-12 கட்டாயம் வாசிக்கவும். |

திருத்தூதர் பணிகள் 10:1-33 — பேதுரு பிற இனத்தவர் மத்தியில் பணி
பேதுருவும் கொர்னேலியுவும்

திருத்தூதர் பணிகள் 12:1-19 — சவால் நிறைந்த பணியின் மத்தியில் விளைவகளை அனுபவித்தல்.

a) திருத்தூதர் பணிகள் 12:1-5 — யாக்கோபு கொலை செய்யப்படுதலும் பேதுரு சிறையிடப்படுதலும்
b) திருத்தூதர் பணிகள் 12:6-19 — பேதுரு சிறையிலிருந்து விடுவிக்கப்படல்

<u>கற்றல் பேறுகள் :-</u>

- ❖ கிறிஸ்துவுக்காக துணிவுடன் பணி செய்தல் கிறிஸ்தவர்களின் பொறுப்பாகும்.
- ❖ சவால்களின் மத்தியில் பின்னடைவர் கூடாது.
- ❖ பணி செய்வதற்காக தூயாவியானவர் எம்மை எப்போதும் பலப்படுத்துகிறார்.
- ❖ பேதுருவை முன்னுதாரணமாக கொண்டு பலன் கொடுக்கும் பணிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

**யாக்கோபு 1:5**

"உங்களிடையே குறைவான ஞானம் கொண்டிருப்போர் கடவுளிடத்தில் கேட்கட்டும்; அப்போது அவரும் ஞானத்தைக் கொடுப்பார். அவர் முகம் கோணாமல் தாராளமாய் எல்லாருக்கும் கொடுப்பவர்."

தரம் 11

பாடம் 12

# தூய ஆவியானவரால் துணிவு பெற்று புது வாழ்வின் அனுபவத்தை பெற வேண்டும்

## பவுலின் மனமாற்றத்தை ஏற்று வாழ வேண்டும்

கிறிஸ்தவ சபையின் மிக உன்னத பணியை நிறைவேற்றிய (பவுல்)[சவுல்] பிற இனத்தவரின் திருத்தூதுவராக அறிமுகப்படுத்தப்பட்டார்.

| | |
|---|---|
| திருத்தூதர் பணிகள் 7:57-66 | ஸ்தேவானை கல்லெறிந்து கொலல் சவுல் உறுதுணையாக இருந்தார். |
| திருத்தூதர் பணிகள் 8:1-3 | சவுல் திருச்சபையை துன்புறுத்தல் |
| திருத்தூதர் பணிகள் 9:1-19 | சவுல் ஆண்டவர் இயேசுவின் அழைப்பைப் பெறல் |
| திருத்தூதர் பணிகள் 9:10-17 | அனனியா மூலம் பார்வை பெறல் |
| திருத்தூதர் பணிகள் 9:20-22 | சவுல் தமஸ்குவில் போதித்தல் |
| திருத்தூதர் பணிகள் 9:23-25 | சவுல் யூதர்களிடமிருந்து தப்பிச் செல்லுதல் |
| திருத்தூதர் பணிகள் 9:26-31 | எருசலேம் நகரத்தில் சவுல் |
| திருத்தூதர் பணிகள் 22:3-5 | பவுல் தன்னை அறிமுகம் செய்தல் |
| திருத்தூதர் பணிகள் 22:22-29 | பவுலும் ஆயிரத்தவர் தலைவரும் (சேனாபதி) |
| திருத்தூதர் பணிகள் 23:6 | தலைமைச் சங்கத்தின் முன் பவுல் |

**<u>பவுல்</u>**

- யூத இனத்தைச் சேர்ந்தவர்
- தர்சு நகரில் பிறந்தவர்
- பல மொழிகள் அறிந்திருந்தார்
- கமாலியெல் என்பவர் நீதிச் சட்டங்களை பவுலுக்கு கற்பித்தார்.

- பவுல் தன் பண்பாட்டை விட்டுக்கொடுக்காதவர். பரிசேயன் பரிசேய மரபில் பிறந்தவர்.
  a) சடங்காசரங்களின்படி ஸ்நானஞ் செய்தல்
  b) கை, கால் கழுவுதல், பாத்திரங்களை சுத்தமாக்குதல்
  c) ஓய்வு நாளை நுட்பமாய் கைக்கொள்ளுதல்
  d) தன் சுயநீதியைக் கொண்டே நன்மையை அடையலாம்
  e) ஆத்துமா சாவதில்லை, உயிர்த்தெழுதல் நியாயத்தீர்ப்பும் உண்டு
  f) தேவதூதர்களிலும் ஆவிகளிலும் நம்பிக்கை உடையவர்கள்

இவர்களுடைய வெளி ஆசாரங்களையும் மாய்மாலமான போதனைகளையும் இயேசு கண்டித்தார்.

<u>செயற்பாடு :-</u>

கிறிஸ்தவ மாணவராகிய நீர் எவ்விதத்தில் மனமாற்றம் பெறவேண்டும் ?

தரம் 11

பாடம் 13

# பவுலின் குணாதிசயங்கள்

**1. பயன்மிக்க திருப்பணியில் கூட்டுத் தலைமைத்துவத்தைப் பின்பற்றினார்.**

| | |
|---|---|
| திருத்தூதர் பணிகள் 15:1-20 | எருசலேம் சங்கம் (பவுல், பர்னபா, யோவான், மாற்கு, பேதுரு, யாக்கோபு) |
| முதல் தூதுரைப் பயணம் | பவுல், பர்னபா, யோவான், மாற்கு |

**2. சவால்களை எதிர்கொண்டு கிறிஸ்தவ பணிகளை உறுதியுடன் செய்தார்**

- தி.ப. 15: 36-41 — 2வது தூதுரைப் பயணம், பவுலும் பர்னபாவும் பிரிதல்.
- தி.ப. 16: 1-15 — பவுல், சீலா ஆகியோருடன் தீமோத்தேயு செல்லுதல்.
- தி.ப. 16:11-15 — லீதியாளின் மனமாற்றம்
- தி.ப. 16:16-25 — குறி சொல்ல ஏவுகிற ஆவியை கொண்டிருந்த பெண்ணை விடுவித்தலும், பவுலும் சீலாவும் சிறையில் வைக்கப்படுதலும்.
- தி.ப. 16:26-40 — பிலிப்பி நகரில் சிறைச்சாலை அதிகாரி இரட்சிக்கப்படுதல்.
- தி.ப. 17:1-9 — தெசலோக்கியாவின் கலகம்
- தி.ப. 17:10-15 — பெரொயாவில் திருத்தூதர்கள்
- தி.ப. 17:16-34 — ஏதென்சில் பவுல்

**3. சரியான நோக்கில் சிறந்த கிறிஸ்தவ பணியில் ஈடுபட்டவர்**

- தி.ப. 19:1-10 — எபேசில் பவுல்
- தி.ப. 19:11-20 — ஸ்கேயாவின் மக்கள்
- தி.ப. 19:21-40 — எபேசுவில் கலகம்

**4. கைது செய்யப்பட்ட நிலையிலும் கிறிஸ்தவ பணியைச் செய்தார்.**

- தி.ப. 21:27-40, 22:1-21 — கோவிலினுள் பவுல் கைது செய்யப்படல்.
- தி.ப. 21:37-40 — பவுல் தன் நிலையை விளக்குதல்

**5. பணியின் சவால்களை சந்தர்ப்பத்திற்கேற்ப எதிர் கொள்வார்.**

- தி.ப. 25:9-12 — சீசரின் விசாரனைகளை பவுல் நாடுதல்.
- தி.ப. 27:1-4 — பவுல் ரோமைக்குச் செல்லுதல்.
- தி.ப. 28:1-10 — மால்தா (மெலித்தா) தீவில் பவுல்
- தி.ப. 28:17-37 — பவுல் ரோமையில் நற்செய்தி அறிவித்தல்.

**6. தனிப்பட்ட மட்டத்தில் கிறிஸ்துவக்குள் வாழ்ந்தார்.**

கலாத்தியர் 2:20 — 2 தீமோத்தேயு 4:17

**7. சமூக மட்டத்தில் கிறிஸ்துவக்குள் வாழ்ந்தார்.**

கலாத்தியர் 2:7-10 — தி.ப. 28:30-31

**8. இறையாடசியின் விழுமியங்களை கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்வுக்கூடாக பகிர்ந்து கொண்டார்.**


தி.ப. 17:16-34 — ஏதேன்சில் பவுல்

தி.ப. 28:1-10 — மால்தா (மெலித்தா) தீவில் பவுல்

## சவால்களின் மத்தியில் பணி

## பவுலின் மூன்றாம் மறைதூதுப் பயணம்

### திருத்தூதர் பணிகள் 18:23-21:17




3ம் தூதுரைப் பயணம் கி.பி. 53-57 காலப்பகுதியில் நடைப்பெற்றது. இந்தப் பயணத்தில் இவருடன் உடன் பணியாளர்களாக லூக்கா, சோபத்தர், அரிஸ்தர்க்கு, செக்குந்து, காயு, திமொத்தேயு, திக்கிக்கு, துரோப்பீம் என்றவர்கள் சென்றனர். கடல்மார்க்கமாக 1904km தூரமும் தரைமார்க்கமாக 2120 km வரை பயணம் செய்தனர்.

தரம் 11

பாடம் 12

# சான்றினூடாக தைரியப் பணி
## திருத்தூதர் பணிகள் 25:10-111, 26:32
## 27ம் , 28ம் அதிகாரங்கள்

- ❖ துணிவுடன் சத்தியத்திற்கு சான்று பகர வேண்டும்.
- ❖ தூதுப்பணிக்கான அழைப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது.
- ❖ வாழ்க்கைப் பயணத்தில், நாம் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.
- ❖ தூய ஆவியானவர் பிரச்சனைகளை வெற்றிக் கொள்ள உதவுகின்றார்.
- ❖ நம் ஆண்டவர் இயேசு பல்வேறு வழிகளில் எமக்கு பதிலளிக்கிறார்.
- ❖ நம் ஆண்டவர் இயேசு எமக்கு செய்த பெரிய காரியங்களைக் குறித்து நாம் சான்று பகர வேண்டும்.

தி.ப. 25:10-11, 26:32 – 27:1 வரை பவுல் உரோம பேரரசின் தீர்ப்புக்கு உள்ளாகுதல்.

தி.ப. 27ம் அதிகாரம் பவுலின் கடல் பிரயாணமும்
சாட்சி பகர்தலும்

தி.ப. 28:1-10 மால்தா தீவில் சான்று பகர்தல்.

தி.ப. 28:11-30 உரோமையில் சத்தியத்திற்கு சான்று பகர்தல்.


- ❖ நாம் போராட்டத்தின் மத்தியில் சான்று பகர்தல் முக்கியமானதாகும்.
- ❖ கிறிஸ்தவர்களாகிய நாம் துணிவுவுடன் சான்று பகர வேண்டும்.

# பவுலின் உரோமையர் பயணம்

திருத்தூதர் பணிகள் 27 – 28 அதிகாரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | **எருசலேம்** **21:27 - 23:22** | → | 2 | **செசரியா** **23:23** |
| 4 | **மீரா நகர்** **27:4-6** | ← | 3 | **சீதோன் துறைமுகம்** **27:3** |
| 5 | **சல்மோன்** **27:7** | → | 6 | **செந்துறை நல்ல துறைமுகம்** **27:8-15** |
| 8 | **மால்தா (மெலித்தா தீவு)** **28:1-11** | ← | 7 | **கவுதா (கிலவுதா)** **27:16-44** |
| 9 | **சிரக்கூசா** **28:12** | → | 10 | **இரேகியு** **28:13** |
| 12 | **அப்பியு சந்தை** **28:15** | ← | 11 | **புத்தயொலி** **28:13-14** |
| 13 | **மூன்று விடுதி** **28:15** | → | 14 | **உரோமை** **28:16-31** |

| | | |
|---|---|---|
| உதவிக்காரர் | : | லூக்கா, அரிஸ்தர்க்கு |
| காலம் | : | கி.பி. 59 – 63 (2½ வருடம்) |
| முழு பிரயாணத் தூரம் | : | 2130 மைல் |
| சமுத்திரத்தில் | : | 1920 மைல் (3072km) |
| தரையில் | : | 210 மைல் (336km) |




பவுலின் உரோமையர் பயணம்

தரம் 11

பாடம் 17

# கிறிஸ்துவின் அன்பின் ஒளியினால் எமது வாழ்வை பிரகாசிக்க செய்ய வேண்டும்

## கிறிஸ்துவும் நானும்
## (நான் இயேசுவுக்கு உரியவன்)

- ❖ நிக்கொதேமுவும் சமாரியப் பெண்ணும் இயேசுவின் அன்பை அனுபவித்தனர்.
- ❖ கிறிஸ்துவை பின்பற்றுவதால் எமது வாழ்வு ஒளி பெறும்.
- ❖ கிறிஸ்துவில் காணப்பட்ட பண்புகளைப் நாம் பின்பற்ற வேண்டும்.
- ❖ அனைவரோடும் அன்போடு வாழ வேண்டும்.

**யோவான் 3:1-15** **<u>இயேசுவும் நிக்கோதேமுவும்</u>**

பரிசேயரான நிக்கோதேமு இரவில் இயேசுவைச் சந்தித்த நிகழ்விலிருந்து நாம் அறிந்து கொள்வது :

- ❖ நிக்கோதேமுவின் மனதில் காணப்பட்ட ஆன்மீக வினாக்களுக்கு இயேசுவிடம் விடைகளைக் கண்டுபிடிக்க ஆவலாய் இருந்தார்.
- ❖ இயேவு இரவிலும் கூட தமது காலத்தையும் ஓய்வுநேரத்தையும் பிறருக்காக அன்புடன் அர்ப்பணித்தார்.

**யோவான் 4:7-10** **<u>இயேசுவும் சமாரியப் பெண்ணும்</u>**

- ❖ இறைவனான இயேசு பாவியான சமாரியப் பெண்ணுடன் கதைத்தல். (100% இறைவன்)
- ❖ யூத ஆண் ஒருவர் சமாரியப் பெண்ணுடன் கதைத்தல். (100% மனிதன்)

**பிலிப்பியர் 2:1-5,16** **<u>தாழ்மையும் ஒற்றுமையும்</u>**

இயேசுவுடன் தனிப்பட்ட உறவில் நாம் இணையும் போது எமது வாழ்வு இருள் நீக்கப்பட்டு ஒளி வீசும் தாரகையாக ஒளிரும். பிலிப்பியர் 2:15b

**<u>இயேசுவுடன் நாம் தனிப்பட்ட உறவுடன் இருப்போமாயின்,</u>**

- ❖ சுயநலமின்றி வாழலாம்.
- ❖ கர்த்தரின் பிள்ளையாக பொறுப்புக்களை நாம் ஒழுங்காக நிறைவேற்றலாம்.
- ❖ சமூகத்திற்கு நாம் பயனுள்ளவர்களாக ஜீவிக்கலாம்.
- ❖ எமது வாழ்வை தூய்மையாக பேணலாம்.
- ❖ எமது வாழ்வை இறைவனுக்காக அர்ப்பணிக்கலாம்.
- ❖ எமது மனநிலை சீராக இருக்கும்.
- ❖ எமது செயல் ஆக்கப்பூர்வமாக இருக்கும்.
- ❖ கிறிஸ்துவில் காணப்படும் பண்புகள் எம்மில் காணப்படும். (பிலிப்பியர் 2:1-5)
- ❖ அனைவரோடும் அன்போடு வாழலாம்.

<u>செயற்பாடு :-</u>

ஆண்டவர் இயேசுவுடனான தனியான தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட நிக்கொதேமு, பவுல், சமாரியப் பெண் ஆகியோர் போன்று நீர் எவ்வாறு ஆண்டவரில் தொடர்பு கொண்டுள்ளீர் ? அந்த அனுபவத்தை விளக்குக.

தரம் 11

பாடம் 18

# நாம் இயேசுவுக்கு உரியவர்கள்

| | |
|---|---|
| தொடக்க நூல் 2:18-24<br>கொலோசேயர் 3:18-21<br>எபேசியர் 5:21 – 6:4 | கிறிஸ்துவுக்குள் குடும்பம்<br>(கிறிஸ்தவ குடும்பத்தின் கடமைகள்) |
| கொலோசேயர் 3:12-17<br>மத்தேயு 25:31-46<br>தீத்து 3:1-2<br>யாக்கோபு 2:1-4<br>சபையுரையாளர் 5:8 | கிறிஸ்துவுக்குள் சமூகம்<br>(சமூகத்தில் எமது கடமைகள்) |

<u>கற்றல் :-</u>

- ❖ கிறிஸ்தவ குடும்பம், சமூகத்தில் ஆற்ற வேண்டிய பொறுப்புக்கள்
- ❖ இறை அச்சத்தோடு செயற்பட வேண்டும்.
- ❖ பெற்றோருக்கு கீழ்ப்படிய வேண்டும்.
- ❖ பிறரின் தேவைகளில் உதவ வேண்டும்.

<u>செயற்பாடு :-</u>

கொலோசேயர் 3:12-17 இல் காணப்படும் கிறிஸ்தவ கொள்கைகளை எழுதுக.

**<u>3:12</u>**

- ❖ நாம் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்
- ❖ நாம் அவரது அன்பிற்குரிய இறைமக்கள்
- ❖ நாம் பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளை அணிந்து கொள்ள வேண்டும்.

**<u>3:13</u>**

- ❖ ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ள வேண்டும்.
- ❖ ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னிக்க வேண்டும்.
- ❖ ஆண்டவர் எம்மை மன்னித்தது போல நாமும் மன்னிக்க வேண்டும்.

**<u>3:14</u>**

- ❖ இவையனைத்திற்கும் மேலாக அன்பையே நாம் கொண்டிருக்க வேண்டும். அன்பே அனைத்தையும் பிணைத்து நிறைவுபெறச் செய்யும்.

**3:15**

- கிறிஸ்து அருளும் அமைதி எம் உள்ளங்களை நெறிப்படுத்த வேண்டும்.
- இவ்வமைதிக்கென்றே நாம் ஒரே உடலின் உறுப்புக்களாக இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.
- நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

**3:16**

- கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி எமக்குள் நிறைவாக குடி கொள்ள வேண்டும்.
- முழு ஞானத்தோடு ஒருவருக்கு ஒருவர் கற்பித்து அறிவுரைக் கூற வேண்டும்.
- திருப்பாடல்களையும் புகழ்பாக்களையும் ஆவிக்குரிய பாடல்களையும் நன்றியோடு உளமாரப் பாடிக் கடவுளை நாம் போற்ற வேண்டும்.

**3:17** எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் நாம் செய்து அவர் வழியாய்த் தந்தையாம் கடவுளுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்.

தரம் 11

பாடம் 19

# சக வாழ்வு வாழ்வோம்
# கிறிஸ்துவில் ஆழமான உறவை ஏற்படுத்தி
# குடும்பம் மற்றும் சமூகத்தை கட்டி எழுப்ப ஒத்துழைக்க வேண்டும்

- ❖ கிறிஸ்தவ குடும்பம், சமூகத்தில் வகிக்க வேண்டிய பொறுப்புக்கள்
- ❖ நாம் இறை அச்சத்தோடு செயற்பட வேண்டும்.
- ❖ பெற்றோருக்கு கீழ்ப்படிய வேண்டும்.
- ❖ பிறரின் தேவைகளில் உதவ வேண்டும்.
- ❖ குடும்பத்தின் நன்நடத்தை சமூகத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

| | |
|---|---|
| எபேசியர் 4:11-16 | கிறிஸ்துவுக்காக நாம் அழைக்கப்பட்டுள்ளோம் |
| 2 கொரிந்தியர் 6:4-7 | அனைத்துச் சூழ்நிலையிலும் கடவுளின் பணியாளர்கள் |
| 2 கொரிந்தியர் 6:14-16 | தூய வாழ்விற்கான அழைப்பு |
| 2 கொரிந்தியர் 7:1 | கடவுளுக்கு அஞ்சி தூய வாழ்வு வாழ்தல். |

### <u>பவுல் முன்வைத்த சில கருத்துக்கள்</u>

1. 2 கொரிந்தியர் 6:16 — வாழும் கடவுளின் கோவில் நாமே.
2. 2 கொரிந்தியர் 7:1 — நாம் உடலிலும் உள்ளத்திலும் மாசு எதுவுமின்றி நம்மையே தூய்மைப் படுத்துவோம்.

<u>செயற்பாடு :-</u>

உங்களில் காணப்படும் கடவுள் அருளிய கொடைகள் மூன்றை அடையாளம் கண்டு, இறை மகிமைக்காக அவற்றை பயன்படுத்தும் வழிமுறைகளை எழுதுக.

தரம் 11

பாடம் 20

# தூயாவியின் வழிகாட்டலை பெறுவோம்
# (தீமையானவற்றுக்கு அடிமை ஆகாமல் இருத்தல்)

இப் பாடத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்வது,

- நல்வாழ்வுக்கு பழக்கப்படுத்திக் கொள்ளும் முறைமைகளை கற்றுக் கொள்ளுதலும் கடைப்பிடித்தலும்
- தூயாவியானவரின் வழிகாட்டலோடு செயல்பட வேண்டும்.
- சரீர இச்சையை விட்டுவிட வேண்டும். (ஊனியல்பு)

நீதிமொழிகள் 23:29-35 துன்ப துயரங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்

எபேசியர் 4:25 உண்மையை பேச வேண்டும்.

கலாத்தியர் 5:16 தூய ஆவியின் வழிகாட்டலுக்கு ஏற்ப செயல்பட வேண்டும்.

கலாத்தியர் 519-21 ஊனியல்பின் (சரீர) செயல்களை அறிந்து கொள்ள வேண்டும்.

உரோமர் 12:1 எமது செயற்பாடுகள் இறைவனுக்கு முன் ஏற்புடையதாக வேண்டும்.

செயற்பாடு :-

தற்கால இளம் சந்ததியினர் தவறு செய்ய தூண்டப்படும் சுபாவம் அதிகரித்துள்ளது என்பதற்கான காரணிகள் சில எழதுக.

- இச்சை
- போலியான வாழ்க்கை (Fantasy Life)
- சோம்பல்தனம்
- சொல் புத்தியும் இல்லை, சுய புத்தியும் இல்லை.
- ஆண்டவரை (இயேசுவை) சார்ந்திராத தன்மை
- தனக்கு எல்லாம் தெரியும் என்ற தான்தோன்றித்தனம்
- நவீன தொழில் நுட்பம். இதில் லாயித்து விடுதல்.
- தூர நோக்கு இல்லாமை
- முறையற்ற முன்னுதாரணங்கள்

தரம் 11

பாடம் 21

# வறுமையின் சவாலை வெற்றி கொள்வோம்

# (வறுமை ஒழிப்புக்கு கை கொடுப்போம்)

இப் பாடத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்வது,

- ❖ ஏன் வறுமை எற்படுகின்றது ? (வறுமை தொடர்பாக தகவல்களை சேகரித்தல்.)
- ❖ வறுமை ஒழிப்புக்கு கை கொடுப்போம்.
- ❖ சுறுசுறுப்புடன் செயற்படுவோம்.
- ❖ ஒவ்வொருவரின் தேவைகளையும் நிறைவேற்றுவதில் ஈடுபடுவோம்.

| | |
|---|---|
| மத்தேயு 6:19-21 | உண்மை செல்வம் |
| லூக்கா 16:19-31 | செல்வரும் இலாசரும் |
| லூக்கா 18:18-31 | இயேசுவை பின்பற்ற விரும்பிய செல்வரன தலைவர் |
| திருத்தூதர் பணிகள் 6:1 | ஏழைகளுக்குப் பெலனாக இருப்பது முக்கியமாகும். |

1. **<u>உலக ரீதியான ஏழ்மையை மேற்கொள்ள வேண்டுமாயின் :-</u>**
   a. ஏழைகளுக்குப் பெலனாக இருப்பது முக்கியமாகும்.
   b. சோர்வடையாமல் செயல்படுவது முக்கியமாகும்.
   c. வளங்கள் முறையாக பகிரப்பட வழிவகுக்க வேண்டும்.
   d. சமூக கட்டமைப்பை ஒழுக்க நெறிக்குட்படுத்த வேண்டும்.
   e. உறுதியான வாழ்விற்கான கொள்கைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
   f. வறுமையை ஒரு சவாலாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.
   g. ஆன்மீக ரீதியாக பெலனடைய வேண்டும்.

2. **<u>ஆன்மீக வறுமை நிலை</u>**
   a. எவ்வித சமய கோட்பாடும் இல்லாமை
   b. ஆன்மீகத்தை சரியாக புரிந்து கொள்ளாமை
   c. விண்ணரசக்கு உகந்தவராக இல்லாமை

இவ்வுலகில் நாம் சேர்க்க வேண்டிய உண்மை செல்வம் என்ன ?

விடை :- மத்தேயு 6:19-21

<u>செயற்பாடு :-</u>

1. வறுமையில் வாடுவோருக்காக நீங்கள் செய்யக்கூடிய இரண்டு விடயங்களைக் குறிப்பிடவும்.
2. வறுமையை ஒழிக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைக் குறித்து இரண்டு பிரேரணைகளை முன் வைக்கவும்

தரம் 11

பாடம் 22

# ஒடுக்கப்பட்டோறை மீட்போம்

# (அல்லல்படுவோரின் விடுதலைக்காக உழைப்போம்)

<u>இப் பாடத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்வது :-</u>

- ❖ இன்னல், துன்பம் என்றால் என்ன ?
- ❖ துன்பப்படுகின்ற மக்கள் ஆறுதல் பெற வேண்டும்.
- ❖ ஆக்கப்பூர்வமான செயற்பாட்டினை முன் வைக்க வேண்டும்.
- ❖ இன்னல்களை தகர்த்தெறிய வேண்டும்.
- ❖ துன்பப்படுகின்ற மக்கள் ஆறுதலையடைய ஒன்றினைந்து செயல்பட வேண்டும்.

**விடுதலைப் பயணம் 2:23-25, 3:9**

- ❖ இஸ்ரயேல் மக்கள் அடிமைத்தனத்தில் பல்வேறு துன்பங்களை அனுபவித்தனர்.
- ❖ இஸ்ரயேல் மக்கள் துன்பங்களின் மத்தியில் இறைவனிடம் முறையீடு செய்தனர்.
- ❖ விடுதலைப் பயணம் 3:9 - இறைவன், இஸ்ரயேல் மக்களின் துன்பங்களைக் கண்டார்.
- ❖ விடுதலைப் பயணம் 2:24 -இறைவன் இஸ்ரயேலரின் முறையீட்டை கண்ணோக்கிய விதம்.
- ❖ இஸ்ரயேலரின் அழுகுரலுக்கு இறைவன் இரக்கம் காட்டினார்.
- ❖ லூக்கா 4:18 - இயேசு சிறைப்பட்டோரை விடுதலையாக்கவும், பார்வையற்றோருக்கு பார்வையளிக்கவும் இவ்வுலகிற்கு வந்தார்.
- ❖ துன்புற்ற மக்களுக்கு இயேசு ஆறதல் அளித்தார்.
- ❖ அழிவு இறைவனின் விருப்பம் அல்ல.

ஒருவருக்கு இன்னல்களை உருவாக்குவதற்கு பதிலாக, நமக்கு இயலுமான வரை மக்களுக்கு உதவ முயற்சிக்க வேண்டும். ஏனெனில் கொடுப்பதினால், அவர்களுக்கு மாத்திரம் அல்ல நமக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது.

கொடுப்பதில் உள்ள மகிழ்ச்சியானது எடுப்பதை விட அதிகம்.

தரம் 11

பாடம் 23

# திருவிவிலியத்தை வாழ்வுடன் கைக்கோர்த்துக்கொள்ள வேண்டும்

## சமூக நீதி

## (நீதியுடன் கூடிய வாழ்வு வாழவேண்டும்)

பாடத்தின் நோக்கம் :- ஆமோஸ் இறைவாக்கினர் அன்றைய சமூக நிலைமைக்குள் நீதி மற்றும் நியாயத்திற்காக குரல் கொடுத்த விதமும் அதனை நாம் எம் வாழ்ககைக்கு எவ்வாறு தொடர்புப்படுத்தலாம் என்பதை கற்றல்.

**வேத பகுதி :- ஆமோஸ் 4ம் , 5ம் அதிகாரங்கள்**

ஆமோஸ் 5:6 :- ஆண்டவரைத் தேடுங்கள் நீங்கள் வாழ்வீர்கள்.

ஆமோஸ் 5:15 :- தீமையை வெறுத்து நன்மையை நாடுங்கள்.

ஆமோஸ் 5:24 :- நீதி வெள்ளமென பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாக பாய்ந்து வருக!

இப் பாடத்தில் நாம் கற்றுக் கொள்வது :-

- ❖ ஆமோஸ் நீதியைக் குறித்து இறைவாக்குரைத்தார்.
- ❖ நேர்மையின் முக்கியத்துவத்தை கற்றல்.
- ❖ ஆமோஸ் இறைவாக்கினர் நேர்மை வாழ்வின் முக்கியத்துவத்தை மக்களுக்கு வலியுறுத்தினார்.
- ❖ தீமையை ஒழித்து நன்மையை நிலைநாட்ட வேண்டும்.
- ❖ மனந்திரும்பி நல்வாழ்வு வாழ வேண்டும்.

சாராம்சம் :-

- ❖ ஆமோஸ் 4:1 - இஸ்ரயேல் மக்கள் அநீதியாக செயல்பட்டனர்.
- ❖ ஆமோஸ் 4:4-12 - அநீதிக்கு எதிராக குரல் கொடுத்தார்.
- ❖ ஆமோஸ் 4:13 - இறைவன் வல்லமையுள்ளவர் என அறிவித்தல்.
- ❖ ஆமோஸ் 5:1-13 - இறைவனிடம் திரும்புவதற்கு அழைப்பு கொடுத்தார்.
- ❖ ஆமோஸ் 5:14-25 - நீதி, நேர்மையின் கொள்கை முன் வைக்கப்படல்.
- ❖ நீதியுடன் கூடிய வாழ்வு வாழ வேண்டும்.

**சவால்** :- நீதியோடும் நேர்மையோடும் எச்சந்தர்ப்பத்திலும் வாழுவேன்.

<u>செயற்பாடு :-</u> ஆமோஸ் 4ம், 5ம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சமூக அநீதிகளைக் குறித்து, அவ்வாறான சமூக அநீதிகள் இன்றைய காலங்களில் ஏற்படுகின்றனவா என ஒப்பிட்டு, அதற்காக தீர்வுகளை கிறிஸ்தவர்களாகிய நாம் எப்படி பெறலாம் என எழுதுக.

| | <u>ஆமோஸ் காலத்து சமூக அநீதிகள்</u> | <u>இன்றைய கால அநீதிகள்</u> | <u>தீர்வு</u> |
|---|---|---|---|
| ஆமோஸ் 4:1 | ஏழைகளை ஒடுக்கி வறியோரை நசுக்குகின்றனர். கணவர்களைப் பார்த்துக் கொண்டு, வாருங்கள் குடிப்போம் என்கின்றனர். | அதே அநீதி | |
| ஆமோஸ் 4:4-5 | நாள்தோறும் பலியிட கொண்டு வரும்படி கேட்கப்படுகின்றனர். மூன்று நாளைக்கு ஒரு முறை 1/10 பங்கை செலுத்தும்படி கேட்கப்படுகின்றனர். | கட்டாயத்தின் பேரில் காணிக்கை செலுத்தும்படி கேட்டல் | 5:6 ஆண்டவரைத் தேடுங்கள். நீங்கள் வாழ்வீர்கள். |
| ஆமோஸ் 5:7 | நீதியை எட்டிக்காயாய் மாற்றுகின்றார்கள். நேர்மை மண்ணில் எறிக்கின்றார்கள். | அதே அநீதி. | 5:14 நன்மையை நாடுங்கள். தீமையை தேடாதீர்கள். |
| ஆமோஸ் 5:11 | ஏழைகளை நசுக்கி அவர்களிடம் தானிய வரியாக வாங்கியதைக் கொண்டு நன்கு செதுக்கிய கற்களால் வீடு கட்டுகிறார்கள். | அதே அநீதி. | 5:11 தீமையை வெறுத்து நன்மையை நாடுங்கள். நீதியை நிலைநாட்டுங்கள். |
| ஆமோஸ் 5:10 | உண்மை பேசுவதை வெறுத்து ஒதுக்குகின்றார்கள். | அதே அநீதி. | 5:24 நீதி வெள்ளமென பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாக பாய்ந்து வருக! |
| ஆமோஸ் 5:12 | இஸ்ரயேல் வீட்டாரின் குற்றங்கள் எவ்வளவு மிகுதியானது. அவர்கள் பாவங்கள் எத்தனைக் கொடியது. நல்லாரை துன்புறுத்துகின்றார்கள். கையூட்டு (இலஞ்சம்) வாங்குகின்றார்கள். வறியோருக்கு நீதி வழங்க மறுக்கின்றார்கள். | | |

**ஆமோஸ் (சுமை தாங்குகிறவன்)**

தெக்கோவா ஊர் மேய்ப்பர்களில் ஒருவர். (ஆமொஸ் 7:4) இவர் ஒரு இறைவாக்கினர். காட்டு அத்திமரத் தோட்டக்காரன். கி.மு. 8ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வட இராச்சியத்திற்கு எதிராக இறைவாக்கு உரைத்தார். 2ம் ஏரோபவாம், நாட்டை பெலப்படுதி பொருள் வளத்தைப் பெருக்கினான். இதனால் செல்வந்தர்கள். பெரிய செல்வந்தர்கள் ஆனார்கள். ஏழைகள் பெரிய வறியவர்கள் ஆனார்கள். இந்த பொருளாதார ஏற்ற தாழ்வு சமூகத்தில் பல அநீதிகளை வெளிப்படுத்தியது. ஏழைகள் ஒடுக்கப்பட்டனர். நீதி புரட்டப்பட்டது.

தரம் 11

பாடம் 24

# பரிசுத்தமான வாழ்வை நோக்கி
# (புனித வாழ்வுக்கு-பரிசுத்த வாழ்வுக்கு இறை வழிபாட்டலை பெற்றுக்கொள்ள வேண்டும்)

இப் பாடத்தில் நாம் கற்றுக் கொள்வது :-

- ❖ எசாயாவின் அழைப்பும், அதன் பின்னனியும்
- ❖ புனித வாழ்வு (பரிசுத்த வாழ்வு) வாழ வேண்டும்.
- ❖ பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும்.
- ❖ புனித வாழ்வு வாழ்வதன் மூக்கியத்துவத்தை தான் அறிந்தது மாத்திரமல்ல பிறருக்கும் அறிவிக்க வேண்டும்.

### எசாயா (கி.மு. 740-700)

எசாயா கி.மு. 8 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எருசலேமில் வாழ்ந்தவர். இவர் இஸ்ரயேலின் இறைவாக்கினர்கள் எல்லாரிலும் பிரதானமானவர். இவர் ஆபோத்சின் குமாரன். இவர் விவாகம் செய்து இரண்டு பிள்ளைகளிருந்தார்கள். யூதா இராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாசு, எசேக்கியா என்பவர்களின் நாட்களில் எசாயா இறைவாக்கு உரைத்தார். கடைசியாக இரத்தசாட்சியாக மரித்தார்.

எசாயா 6ம் அதிகாரம் :- ஒரு வேலை கவனிப்பதற்கென எசாயா ஏற்படுத்தப்படுகின்றார். உலக செழிப்புமிக்க வாழ்வால் ஆன்மீகக் கண்கள் குருடாக்கப்பட்ட மக்களுக்கு இறைவாக்கு உரைக்கும்படி எசாயா அனுப்பப்படுகின்றார்.

எசாயா மேல் நோக்கிப் பார்த்தார் - இறைவனைக் கண்டார். - எசாயா 6:1

எசாயா உள் நோக்கிப் பார்த்தார் – தம்மைக் கண்டார். (தம் பிழைகளை உணர்தல்)
- எசாயா 6:5, 51:2,10

எசாயா சுற்றிலும் பார்த்தார் - தேவையைக் கண்டார் – எசாயா 6:8

எசாயா 6ம் அதிகாரத்தில் ஆண்டவரின மகிமை, மேன்மை, தூய்மை ஆகியவற்றை முக்கிய நோக்கமாக இறைவாக்கு கூறப்பட்டுள்ளது. இவை தற்காலத்தில், திருச்சபைகளில் உள்ளனவா ? சிந்திப்போம்.

ஆண்டவரை நெருங்கி வரும் அனைவரும் பாவம் மன்னிக்கப்பட்டவர்களாகவும், தூய ஆவியாரால் கழுவப்பட்ட இதயம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.
- எபிரேயர் 10:19-22, திருவெளிப்பாடு 22:11.

சரியான முறையில் தூய்மையாக்கப்பட்ட பின்தான் இறைவாக்கினருக்குரிய அழைப்பை எசாயா பெறுகின்றார். அவ்வழைப்பு “உலக முழுவதற்கும் இரட்சிப்பின் சுவிசேஷம் செல்ல வேண்டும்.” (மத்தேயு 28:18-20) என்பதாகும். எசாயாவைப் போல நாமும் “இதோ நான் இருக்கிறேன், என்னை அனுப்பும்” எனக் கூறி கீழ்ப்படிய வேண்டும்.

<u>செயற்பாடு :-</u>

1. எசாயாவின் அழைப்பிற்குள் பரிசுத்தத்தைக் குறித்து நீர் கற்றுக்கொண்ட சில விடயங்களைக் குறிப்பிடுக.
   - i. சிரியாவினாலும் இஸ்ரயேல் இராச்சியத்தாலும் யூதாவிற்கு பலத்த படையெடுக்கும் அச்சுறுத்தல் காணப்பட்ட பின்னணியில் இறைவாக்குரைக்குப் பணிக்கு அழைக்கப்பட்டார்.
   - ii. கடவுளுக்கு கீழ்படியாமை, ஆண்டவரில் நம்பிக்கை கொள்ளாமையான சூழ்நிலையில் ஆண்டவர் எதிர்ப்பார்க்கும் பரிசுத்தத்தைக் குறித்து இறைவாக்குரைத்தார்.
   - iii. பரிசுத்த ஆலயத்தில் இருக்கும் போதே அழைப்பினை பெறுகிறார்.
   - iv. எசாயா, தான் ஒரு ‘பிரயோஜனமற்றவன்’ என்னும் தூய்மையற்ற உதடுகளைக் கொண்டு மக்கள் நடுவில் வாழ்பவன் என்று அறிக்கையிடுகின்றார். அதாவது, கடவுளின் மகா பரிசுத்தத்திற்கு முன்னால் தன் பாவ இயல்பை உணர்கிறார். (எசாயா 6:5)
   - v. நெருப்புப் பொறி எசாயாவின் வாயைத் தொட்டு அவருடைய பாவத்தை மன்னித்து அவருடைய குற்றப்பழி அவரை விட்டு நீங்குவதாக கூறப்படுகின்றது. அதாவது ஆண்டவர் பரிசுத்தமற்ற பாவியாகிய மனிதரை புறம்பே தள்ளாது ஏற்கிறார். அதாவது மகா பரிசுத்தமுள்ள ஆண்டவர், மனிதருக்கு அருளும் பரிசுத்தமான வாழ்க்கையே அக் கொடையாகும்.

2. இறைவாக்கினர்களின் பணிகளை குறிப்பிடுக.

   இறைவனால் அழைக்கப்பட்டு இறை ஏவுதலால் வெளிப்படுத்தப்பட்ட இறை செய்தியை மக்களுக்கு அறிவிப்பதுடன், இறை மக்கள் ஆண்டவரை விட்டு தூரச் சென்று தீய வாழ்வை வாழும் போது, அவ்வாறான தீமைக்கு காரணமானவற்றை ஆராய்ந்து பார்த்து தீமையிலிருந்து மக்களை காப்பாற்றி மீண்டும் இறைவனிடம் கொண்டு வருவதாகும்.

தரம் 11

பாடம் 25

# புத்தெழுச்சியின் உதயம்
## (சமாதானத்தை உருவாக்க எம் பங்களிப்பு)

<u>இப் பாடத்தில் நாம் கற்றுக் கொள்வது :-</u>

- ❖ இறைவாக்கினர் மீக்காவின் சமாதானத்தின் செய்தி
- ❖ சமாதானத்தோடு வாழ வேண்டும்.
- ❖ சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நாம் செயல்பட வேண்டும்.
- ❖ ஒற்றுமையான உலகை கட்டியெழுப்புவதற்கு நாம் ஒன்றிணைந்து பங்களிப்பு வழங்க வேண்டும்.

**மீக்கா (கி.மு. 756-687)**

இவர் ஒரு இறைவாக்கினர். எசாயா மற்றும் மீக்கா சமகால இறைவாக்கினர். மீக்காவின் இறைவாக்குகள் உறுதியும் தெளிவுமானவை. சமூக நீதி குறித்துத் திடமான கருத்துக்களை முன் வைத்தார். யூத இராச்சியத்தின் தலைவர்களை கண்டிக்கிறார். சமாதானம் மற்றும் சமாதான நிலை குறித்து சிறப்பான சில கருத்துக்களை முன் வைக்கிறார்.

<u>சமாதானத்தை நாம் உருவாக்க வேண்டுமெனின்,</u>

- ❖ எமது உள்ளத்தில் அமைதி காணப்பட வேண்டும்.
- ❖ பிறருடன் சமாதானமாக வாழ வேண்டும்.
- ❖ இறைவன் சமாதான வாழ்வை விரும்புகின்றார்.

மீக்கா 4:1-2 - இறைவன் அனைத்துலக ஆட்சியை ஏற்படுத்துகிறார்.

மீக்கா 4:3 - இறைவன் சமாதானத்தை அருளிச் செய்வார்.

மீக்கா 4:4 - பிறருடன் சமாதானமாக வாழ வேண்டும்.

மீக்கா 4:5 - இறைவன் எல்லா இனத்தாரையும் ஏற்றுக்கொண்டார்.

மீக்கா 4:6 - இறைவன் ஒடுக்கப்பட்டவரையும் விரட்டியடிக்கப்பட்டோரையும் ஒன்று சேர்ப்பார்.

மீக்கா 5:9 - சமாதானமாக வாழ வேண்டும். (குறிப்பாக வீட்டில்)

சமாதானம் ஏற்பத்துகிறவர்கள் ஆண்டவரின் பிள்ளைகள் - மத்தேயு: 5:9

நீதித்தலைவர்கள் 6:24 - நலம் நல்கும் ஆண்டவர் – யெகோவா ஷாலோம்

**கௌ. அருட்பணி. மைக்கல் வெப்ஸ்லி** (குறிப்பு - தரம் 11, பக்கம் 126)

**பேராயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க**

அங்கிலிக்கன் திருச்சபையின் இளைய பேராயரும் வலதுசாரியாகவும் இருந்தவர்.

பிறப்பு :- 1927 மார்ச் 25

இறப்பு :- 1983 அக்டோபர் 23, கொழும்பில்

திருநிலைப்படுத்தல் :- 1962

1983 கறுப்பு ஜுலையின் போது தைரியமாக யாழ்ப்பாணம் சென்றார். மாரடைப்பால் உயிரிழைந்தார்.

செயற்பாடு :-

உமது வீடு, பாடசாலை, ஆலயம், விளையாட்டு போன்ற இடங்களில் கிறிஸ்தவ பிள்ளையாகிய நீர் எவ்வாறு சமாதானத்தை உருவாக்குவீர் ? (உதாரணம் - ரோமர் 12:21)